முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்

முன்னிலை– திரு.ஏ.கே.மெஹ்பூப்அலிகான், B.L.M.,L.L.M.,PG.D.PM/IR,
Dip.in.J.J & J.Psy., PG.DDF.,

முதன்மை மாவட்ட நீதிபதி,

இராமநாதபுரம்.

**2025 ஆண்டு செப்டம்பர் மாதம் 11ம் நாள் வியாழக்கிழமை**

**I.A.No. 3/2025**
**in**
**MCOP.79/2024**

1. பூரணம்
2. மணிவண்ணன்
3. புனிதமலர்
4. மலர்விழி .... மனுதாரர்கள்

/எதிர்/

முத்துப்பாண்டி .... எதிர்மனுதாரர்

இம்மனுவானது என் முன்பாக 01.08.2025ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.இராமலிங்கம், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.சௌந்தரபாண்டியன், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதத்தைக் கேட்டும், இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

**<u>உத்தரவு</u>**

இம்மனுவில் மனுதாரர்கள் தரப்பில் மோட்டார் வாகன விபத்துக் கோருரிமை அசல் மனு எண்.79/2024ல் கடந்த 26.07.2024ம் தேதியன்று

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.11 18:14:07 +0530

தள்ளுபடி செய்யப்பட்ட அசல் மனுவை மீண்டும் கோப்புக்கு எடுத்து மேல் நடத்த உத்தரவிடக் கோரி உரிமையில் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 9–ன் கீழும் மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:–**

இம்மனுவின் மனுதாரர் மோட்டார் வாகன விபத்துக் கோருரிமை அசல் மனு எண்.79/2024–ல் 1ம் மனுதாரர் ஆவார். மோட்டார் வாகன விபத்துக் கோருரிமை அசல் மனுவானது 26.07.2024ம் தேதியன்று விசாரணைக்காக வந்தபோது 1ம் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாமல் போனதால் 1ம் மனுதாரர் இந்நீதிமன்றத்தில் ஆஜராக தவறியதன் காரணமாக அசல் மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி தேதியில் 1ம் மனுதாரர் வேண்டுமென்றே ஆஜராகாமல் இருந்ததில்லை. எனவே கடந்த 26.07.2024ம் தேதியன்று தள்ளுபடியான அசல்மனுவை மீண்டும் கோப்புக்கு எடுக்கவேண்டியது அவசியமாக உள்ளது. இல்லாது போனால் மனுதாரர்களுக்கு மிகுந்த பாதகமும், கஷ்ட நஷ்டமும் ஏற்படும். எனவே அசல் மனுவை மீண்டும் கோப்புக்கு எடுத்து மேல்நடத்த உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:–**

மனுதாரர் மனுவில் கூறியது முற்றிலும் தவறானது. வழக்கின் நடவடிக்கைகளை தாமதப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் மனுதாரர்கள் செயல்பட்டு வருகின்றனர். மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரர்கள் கோரும் பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கக்கூடியதல்ல. எனவே மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்யவேண்டும்.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.11 18:14:11 +0530

4. <u>இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில்;</u>

மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ளதுபோல் அசல் மனு எண்.79/2024 ல் கடந்த 26.07.2024 ம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்ட அசல் மனுவை மீண்டும் கோப்புக்கு எடுத்து மேல் நடத்த உத்தரவிடக் கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 9-ன் கீழ் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

<u>தீர்வு:-</u>

5. மனுதார்கள் தரப்பில் அசல் மனு எண்.79/2024 ல் கடந்த 26.07.2024 ம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்ட அசல் மனுவை மீண்டும் கோப்புக்கு எடுத்து மேல் நடத்த உத்தரவிடக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில், அசல் மனுவானது 26.07.2024 ம் தேதியன்று விசாரணைக்காக வந்தபோது 1 ம் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாமல் போனதால் 1 ம்மனுதாரர் இந்நீதிமன்றத்தில் ஆஜராக தவறியதன் காரணமாக அசல் மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாகவும், 1 ம் மனுதாரர் மேற்படி தேதியில் வேண்டுமென்றே ஆஜராகாமல் இருந்ததில்லை எனவும், எனவே கடந்த 26.07.2024 ம் தேதியன்று தள்ளுபடியான அசல்மனுவை மீண்டும் கோப்பிற்கு எடுத்து தகுதியின் அடிப்படையில் தீர்வு காணப்படாவிட்டால் மனுதாரர்களுக்கு மிகுந்த பாதகமும், கஷ்ட நஷ்டமும் ஏற்படும் என்பதாக வாதிடப்பட்டது.

7. எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவில் மனுவை அனுமதிப்பதற்கான போதுமான சரியான காரணங்கள் எதுவும்

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.11 18:14:15 +0530

குறிப்பிடவில்லை எனவும், எனவே மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

8. இருதரப்பு வாதுரைகள் மற்றும் ஆவணங்கள் ஆகியவை பரிசீலனை செய்து பார்க்கையில், இம்மனுவில் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள அசல் மனுவானது 26.07.2024ம் தேதியன்று விசாரணைக்கு வந்தபோது 1ம் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் 1ம் மனுதாரரால் இந்நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை எனவும், மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்கப்படும் கோரிக்கை நியாயமான வகையில் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் அமைந்துள்ளது. பொதுவாக நீதிமன்றம் தன் முன்புள்ள வழக்கை தகுதியின் அடிப்படையில் தீர்வு செய்வதற்கு தரப்பினருக்கு உரிய வாய்ப்பு அளிக்கவேண்டும் என்பது நிலைநிறுத்தப்பட்ட சட்ட நியதியாகும். மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்கத்தக்க வகையில் நியாயமானதாக உள்ளது. எனவே மனுதாரர்களுடைய மனுவை அனுமதிக்கவேண்டியது நீதியின்பொருட்டு அவசியம் என இந்நீதிமன்றம் கருதுகிறது. இருப்பினும் அசல்மனு தள்ளுபடியான காலத்திற்கான வட்டி மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்து அந்த நிபந்தனையின் பேரில் இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

**இறுதியாக,**

இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. மோட்டார் வாகன விபத்துக் கோருரிமை அசல் மனு தள்ளுபடியான தேதிமுதல் மனு மீண்டும் கோப்பிற்கு எடுக்கும் தேதிவரைக்கான வட்டி மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் உத்தரவிடப்படுகிறது.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.11 18:14:19 +0530

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு 2025ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 11–ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.11 18:14:24 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

**உபய தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** : –இல்லை–

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.11 18:14:29 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி
இராமநாதபுரம்